# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **OS.No. 36/2022** | **Date : 17.06.2025** | **PW 4** |
| Name: சொக்கையன் | த/பெ. முத்துகவுண்டர் | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. வாதிகள் எனக்கு உறவினரா என்றால் இல்லை. பழக்கம் அவ்வளவுதான். இந்த வழக்கு குறித்த சங்கதிகள் எனக்கு தெரியும். இநத வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கல் மண்டபம் வாதி முத்துசாமியின் மூதாதையர்களால் கட்டப்பட்டது ஆகும். மேற்படி கல் மண்டபத்தில் பங்குனி மாதம் தேர்திருவிழா நடைபெறும். மார்கழி மாதம் ஆரூத்ரா அபிஷேகமும், திருக்கல்யாணமும் நடைபெறும். அதில் நான் கலந்து கொண்டுள்ளேன். மேற்படி விழாக்கள் கோவில் நிர்வாகிகள் மற்றும் தர்மகர்த்தாக்கள் முன்பாக நடந்ததா என்றால் கல் மண்டபத்திற்கு தர்மகர்த்தா யாரும் இல்லை. மேற்படி விழாக்களுக்கு யார் செலவு செய்கின்றனர் என்றால் வாதி முத்துசாமி, தியாகராஜன் அவர்கள் வகையறாக்கள் தான் செலவு செய்து வருகின்றனர். மேற்படி விழாக்களுக்கு செலவு கோவில் நிர்வாகிகளால் செய்யப்பட்டு வருகிறது என்றாலும் வாதி வகையறாவால் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. பங்குனி மாதம் நடைபெறும் உற்சவம் எத்தனை நாட்கள் நடைபெறும் என்றால் ஒரே நாள் நடைபெறும். மார்கழி மாதம் இரண்டு நாட்கள் நடைபெறும். மேற்படி கோவிலில் இருந்து வரும வருமானத்தை கொண்டு கோவில் நிர்வாகிகளால் மேற்படி விழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது என்றாலும் வாதி வகையறாவால் நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கல்மண்டபம் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமானது என்றாலும் வாதிகளுக்கு அது பாத்தியப்பட்டது அல்ல என்றாலும் சரியல்ல. நான் வாதிகளின் நண்பர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/—சொக்கையன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—A.சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.